ஸ்ரீ ஸ்ரீ குரு - ஹௌரங்கா ஜயதா

# பகவத் கீதையின் சாரம்



ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

"உன் மனதையும், இதயத்தையும் என்னிடம் கொடு. என் பக்தனாகி என்னை வழிபடு. எனக்கு வந்தனம் செய். அப்படியானால் நீ கண்டிப்பாக என்னிடம் வந்து சேருவாய். நான் இதைச் சத்தியம் செய்கிறேன். ஏனென்றால் நீ எனக்கு மிகவும் பிரியமானவன்.“ - (பகவத் கீதை 18.65)

சுருக்கமாகக் கூறப்போனால், இந்த ஸ்லோகம் பிருந்தாவன, அதாவது " ப்ரஜ" பக்தியை எவ்வாறு அடைவது என்பதையே குறிப்பிடுகிறது.

கீதை நமக்குக் கொடுக்கும் அஸ்திவாரத்தில் தான் நாம் பக்தி என்ற மாளிகையைக் கட்டி, அதில் ஸ்ரீஸ்ரீ ராதா ராணியையும் ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணரையும் இருத்தி பரவசம் பொங்க பக்தி ரசத்துடன் பூஜை செய்ய முடியும். இதுவே பகவத் கீதையின் சாரம்!






ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த
நாராயண மகாராஜா

# மூல நூலாசிரியரைப் பற்றி

ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த நாராயண மகாராஜா உலக ஜீவன்களின் மேல் கருணை கொண்டு இந்தியாவில் புனித கங்கை நதியோரமுள்ள தேவாரிப்பூர் என்ற கிராமத்தில் 1921-ஆம் ஆண்டு தோன்றினார்.

கிருஷ்ண பக்தர்களால் குருதேவர் என்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீ நாராயண மகாராஜா, ஸ்ரீ கிருஷ்ணரிடம் துவங்கி வழிவழியாக வரும் குரு பரம்பரையைச் சேர்ந்தவர். ஆன்மீகத்தில் மிகவும் உயர்ந்த ஞான நிலையை அடைந்து அதன் உண்மைகளை நேரடியாக உணர்ந்தவர். ஸ்ரீல பக்தி பிரக்ஞான கேசவ மகாராஜாவிடம் குரு தீட்சை பெற்று, பின் கிருஷ்ண பக்தியை உலகம் முழுவதும் பரப்பிப் பெருமை பெற்ற அ.ச.பக்தி வேதாந்த பிரபுபாதாவைச் சிக் ஷ குருவாகப் பெற்றவர்.

அனைத்து வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் மற்றும் அனைத்து ஆன்மீக சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்று முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களும், வியாக்கியானங்களும் ஹிந்தியில் எழுதி, அவை அனைத்தும் ஆங்கிலத்திலும் மற்றும் பற்பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.

உலகெங்கிலும் உள்ள மக்கள் ஜாதி, மத வேறுபாடின்றி ஸ்ரீமத் நாராயண மகாராஜாவிடம் அடைக்கலம் அடைகின்றனர். அவரது சுயநலமற்ற, உண்மையான அன்பும், ஆதரவும் உன்னதமான ஆன்மீக சேவையும் இந்த உலகின் அனைத்து மக்களையும் ஈர்க்கின்றன. ஏராளமான சேவாலயங்களையும், பக்தித் தொண்டு நிறுவனங்களையும் நடத்தி வருவதுடன் உலகெங்கும் சென்று பக்தர்களின் தேவைகளைக் கனிவுடன் கவனிக்கின்றார். இதுவரை சுமார் 30 முறைகள் உலகத்தை வலம் வந்தவர்.